36. செல்லின் அளவைக் குறிக்கும் குறியீடு ________

1. சென்டிமீட்டர் 2. மில்லி மீட்டர் 3. மைக்ரோ மீட்டர் 4. மீட்டர்

37. நுண்ணோக்கியில், பிரியா செல்லை பார்க்கும்போது அச்செல்லில் செல்சுவரும் நியூக்ளியசும் இருக்கிறது. பிரியா பார்த்த செல்_______.

1. தாவர செல் 2. விலங்கு செல் 3. நரம்பு செல் 4. இரத்த செல்

38. யூகேரியாட்டின் கட்டுப்பாட்டு மையம் எனப்படுவது __________

1. செல்சுவர் 2. நியூக்ளியஸ் 3. நுண்குமிழ்கள் 4. பசுங்கணிகம்

39. கீழே உள்ளவற்றுள் எது ஒரு செல் உயிரினம் அல்ல?

1. ஈஸ்ட் 2. அமீபா 3. ஸ்பைரோஹைரா 4. பாக்டீரியா

40. யூகேரியாட் செல்லில் நுண்ணுறுப்புகள் காணப்படும் இடம் _______

1. செல்சுவர் 2. சைட்டோபிளாசம் 3. உட்கரு 4. நுண்குமிழ்கள்

41. செல் என்ற சொல்லை உருவாக்கியவர் _______.

1. ராபர்ட் பிரௌன் 2. ராபர்ட் ஹூக் 3. ராபர்ட் பாயில் 4. ராபர்ட் ஜெபர்சன்

42. செல்லினுள்ளேயும், வெளியேயும் பரிமாற்றத்திற்குப் பயன்படும் உறுப்பு?

1. செல்சுவர் 2. செல்சவ்வு 3. உட்கரு சவ்வு 4. எண்டோபிளாச வலை

43. மனித உடலின் மிக நீளமான செல் _______.

1. நரம்பு செல் 2. எலும்பு செல் 3. தசை செல் 4. புறத்தோல் செல்

44. பசுங்கணிகம் சூரிய ஒளி ஆற்றலை _______ ஆற்றலாக மாற்றுகிறது.

1. மின் 2. இயக்க 3. வேதி 4. வெப்ப

45. 'செல்லுலா' என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் பொருள் _______.

1. பெரிய அறை 2. சிறிய அறை 3. உருவமற்றது 4. அடிப்படை அலகு

46. ராபர்ட் ஹூக் தமது நுண்ணோக்கியின் கீழ் வைக்கப்பட்ட பொருளை ஒளியூட்ட எந்த லென்சை பயன்படுத்தினார்?

1. குவிலென்ஸ் 2. குழி லென்ஸ் 3. நீர் லென்ஸ் 4. வாயு லென்ஸ்

47. ராபர்ட் ஹூக் எழுதிய நூலின் பெயர் _______.

1. மைக்ராஸ்கோப் 2. மைக்ரோகிராபியா 3. மேக்ரோகிராபியா 4. மேக்ராஸ்கோப்

LIVEWORKSHEETS

48. மனித உடலில் உள்ள செல்களின் எண்ணிக்கை (தோராயமாக) _______.

1. $7.3 \times 10^{13}$ 2. $3.7 \times 10^{31}$ 3. $3.7 \times 10^{13}$ 4. $1.3 \times 10^{13}$

49. ஒரு மைக்ரோமீட்டர் என்பது ஒரு மீட்டரில் _______ ல் ஒரு பங்கு ஆகும்.

1. 1000 2. 10000 3. 100000 4. 1000000

50. நெருப்புக்கோழி முட்டையின் விட்டம் _______.

1. 170 செமீ 2. 170 மீட்டர் 3. 170 மிமீ 4. 170 டெசிமீ

51. இராபர்ட் ஹூக் தாவர செல்களில் பார்த்த அமைப்பின் பெயர்?

1. புரோட்டோபிளாசம் 2. செல்சுவர் 3. நியூக்ளியஸ் 4. ட்ரக்கீட்கள்

52. தாவர செல்களில் வாக்குவோல்களைச் சுற்றியுள்ள ஒற்றை படலத்தின் பெயர்?

1. அபோபிளாஸ்ட் 2. சிம்பிளாஸ்ட் 3. டோனோபிளாஸ்ட் 4. குளோரோபிளாஸ்ட்

53. ஒரு செல்லில் உட்கருவைத் தவிர வேறு எந்த நுண்ணுறுப்பில் டி.என்.ஏ உள்ளது?

1. கோல்கை உறுப்பு 2. மைட்டோகாண்ட்ரியா

3. லைசோசோம் 4. சென்ட்ரியோல்

54. பாக்டீரியாக்களின் செல் சுவரில் உள்ளது?

1. மியூக்கோபெப்டைடு 2. லிக்னின் 3. செல்லுலோஸ் 4. பெக்டோஸ்

55. பின்வருவற்றுள் எவற்றில் ATP உற்பத்தி நடைபெறுகிறது?

1. உட்கூழ்மம் 2. மைட்டோகாண்ட்ரியா வெளிச்சவ்வு

3. மைட்டோகாண்ட்ரியா உட்சவ்வு 4. இவற்றில் எதுவுமில்லை

56. பசுங்கணிகத்தில் பச்சையம் காணப்படும் இடம் யாது?

1. தைலக்காய்டுகள் 2. வெளிச்சவ்வு 3. உள்சவ்வு 4. ஸ்ட்ரோமா

57. செல்லின் பலவகையான பணிகளை மேற்கொள்ளும் பரப்பாக விளங்குவது?

1. சைட்டோபிளாசம் 2. பசுங்கணிகம் 3. மைட்டோகாண்ட்ரியா 4. உட்கரு

58. புதிதாக உருவாக்கப்படும் புரதங்களை மாற்றி அமைத்து அதை தகுந்த இடத்திற்கு கொண்டு சேர்க்கும் முக்கிய உறுப்பு எது?

1. கிளையாக்ஸிசோம்கள் 2. ஸ்பிரோசோம்கள்

3. மைட்டோகாண்ட்ரியா 4. எண்டோபிளாச வலை

59. இரண்டு அருகருகே அமைந்த செல்களுக்கு இடையே உள்ள எந்த அமைப்பு பயனுள்ள கடத்தலில் வழியாக அமைகிறது?

LIVEWORKSHEETS

1. மையத்தட்டு 2. பிளாஸ்மோடெஸ்மேட்டா

3. இரண்டாம்நிலை செல்சுவர் அடுக்கு 4. முதன்மைச்சுவர் அடுக்கு

60. லிப்பிடுகள் அதிகளவில் உற்பத்தியாகும் இடம் ______.

1. சொரசொரப்பான எண்டோபிளாச வலை 2. வழவழப்பான எண்டோபிளாச வலை

3. சென்ட்ரியோல் 4. லைசோசோம்

61. சுரக்கும் செல்கள் அதிகளவில் காணக்கூடிய செல் நுண்ணுறுப்பு எது?

1. உட்கரு 2. பசுங்கணிகம்

3. மைட்டோகாண்ட்ரியா 4. டிக்டியோசோம்கள்

62. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது உறுதியைத் தருவதுடன், புரதச் சேர்க்கையிலும் மற்றும் நொதிகளை கடத்துவதிலும் ஈடுபடுகிறது?

1. எண்டோபிளாச வலை 2. செல் சவ்வு

3. மைட்டோகாண்ட்ரியா 4. டிக்டியோசோம்கள்

63. ஆக்சிஜன் இன்றி உயிர் வாழக்கூடிய உயிருள்ள மிகச்சிறிய செல்?

1. பேசில்லஸ் 2. மைட்டோகாண்ட்ரியா

3. சூடோமோனாஸ் 4. மைக்கோபிளாஸ்மா

64. ஒரு புரோகேரியாட் வகை செல்லின் பண்பைக் கண்டறியவும்.

1. செல்சுவர் காணப்படுவது 2. 80S வகை ரிபோசோம் காணப்படுவது

3. மரபணு பொருள் காணப்படுவதில்லை 4. 70S வகை ரிபோசோம் காணப்படுதல்

65. ஒன்றைத் தவிர மற்ற அனைத்து செல்களிலும் மைட்டோகாண்ட்ரியா காணப்படுகிறது?

1. ஈஸ்ட் 2. பாக்டீரியா 3. பூஞ்சை 4. ஆல்கா

66. ______ , ______ மற்றும் ______ முறையே சிஸ்டர்னே, தைலக்காய்டு மற்றும் கிரிஸ்டே காணப்படுகின்றன.

1. மைட்டோகாண்ட்ரியா, ரைபோசோம், பசுங்கணிகம்

2. கால்ஜி உடலம், பசுங்கணிகம், மைட்டோகாண்ட்ரியா

3. ரிபோசோம்கள், பசுங்கணிகம், மைட்டோகாண்ட்ரியா

4. குரோமோசோம்கள், தைலக்காய்டு, மைட்டோகாண்ட்ரியா

67. விலங்குகளின் விந்து செல் உற்பத்தியில் 'அக்ரோசோம்' என்ற அமைப்பை உருவாக்கும் செல் நுண்ணுறுப்பு எது?

1. லைசோசோம் 2. பசுங்கணிகம் 3. கோல்கை உறுப்புகள் 4. குரோமோசோம்

LIVEWORKSHEETS

68. நியூக்ளியஸ், பசுங்கணிகம், மைட்டோகாண்ட்ரியாவின் பொதுப்பண்பைக் கண்டறிக?

1. நியூக்ளிக் அமிலம் 2. லாமெல்லா 3. கிரிஸ்டே 4. நியூக்ளியோலஸ்

69. சைட்டோபிளாசத்தில் உள்ள செயல்திறனற்ற செல் நுண்ணுறுப்புகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

1. ஒதுக்கீடு பொருட்கள்
2. படிகங்கள்
3. எர்காஸ்டிக் பொருட்கள்
4. சுரக்கும் பொருட்கள்

70. ரிபோசோம்கள் எந்த செல் உறுப்பிலிருந்து தோன்றுகின்றன?

1. நியூக்ளியஸ்
2. எண்டோபிளாச வலைப்பின்னல்
3. மைட்டோகாண்ட்ரியா
4. நியூக்ளியோலஸ்

LIVEWORKSHEETS